**Rates**

*Subscription*: Rs. 6 per year. (including postage)

Single copy: 15 cts. (including postage)

*Advertisement*: On application.

*'In Memoriam'*: (within 4 inches) Rs. 5 per insertion.

*'Order Nisi'*: Rs. 3 per insertion.

# THE MORNING STAR

Registered as a Newspaper | ( Established 1841 ) | Published every Friday

VOL. 105 | JAFFNA, FRIDAY, JUNE 22, 1945 | NO. 24.

JAFFNA COLLEGE ... JUN 26 1946 ... VADDUKODDAI, CEYLON.

**Notice**

Please send all editorial correspondence as well as all business matters to Tellippalai. This will ensure prompt attention.

RIGHTEOUSNESS EXALTETH A NATION, BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.

## NEWS

### LOCAL

#### Food and Craft Exhibition, N. D.

The Hon'ble Mr. A. Mahadeva, Minister for Home Affairs, declared open yesterday a Food and Crafts Exhibition organised by Mr. V. K. Nathan, Education Officer of the Northern Division, at Stanley Govt. Central School, Jaffna. The Exhibition will be opened today by Mr. S. L. B. Kapukotuwa, Deputy Director of Education and tomorrow by Mr S. Nateson, Member of the State Council. The Exhibition will consist mainly of the exhibits of the different circuits of the Northern Division in Housecraft, Health, Art, and Handicraft. There will be four concerts by the schools of the different circuits, two on Thursday and two on Friday, under the patronage of Mr. C. Ponnambalam, Chairman U. C. Jaffna and Mr. C. Coomaraswamy. G. A. N. P., respectively. On Saturday at 7 p. m. the prize distribution function will take place when Sir Waithilingam Duraiswamy, Speaker of the State Council will distribute the prizes.

#### Methodist Festival

The Annual Festival of the Methodist Church in Jaffna is to be held on the 27th, 28th and 29th inst. The Festival is held every year to commemorate the landing in Ceylon on the 29th June 1814 of the first Missionaries of the Methodist Mission from England. This year's programme includes, besides the usual Ingathering and Sale. on the 27th inst. at 3.30 p. m. at the Jaffna Central Central College Hall, a "Victory" Concert on the 28th inst. at 7 p. m, and a public meeting on the 29th, inst. preceded by a Garden Party, at the Vembadi Mission House compound.

#### Acting Minister Feted

Mr. J. G. Rajakulendran, Acting Minister of Labour, Industry and Commerce was entertained at a Social held last Wednesday evening at the Galle Face Hotel. Messrs. G. G. Ponnambalam, S. J. V. Chelvanayagam, J. Tyagarajah and Dewan Bahadur I. X. Perera spoke on the occasion. Among those present were: Mr. M. S. Aney, the Raj Representative, Mr. C. H. Collins, the Acting Chief Secretary and Mrs. Collins, Mr. V. Coomaraswamy, Government Agent, Western Province and Mrs. Coomaraswamy and several other government officials and members of the State Council.

#### Disastrous Fire at Trincomalee

Some 350 houses and more than 6,000 people were rendered homeless as a result of an outbreak of fire at Moor Street, Trincomalee. It appears that a row of huts in the Inner Harbour Road, Moor Street area caught fire and the strong breeze caused the blaze to spread into the town affecting the fire station in Moor Street, a Catholic school, and finally a thickly populated area. Relief was immediately arranged by the Chairman of the Urban Council and the A. G. A. (Emergency). Accommodation has been arranged in temples for the homeless.

#### Jubilee of Father Long

The celebrations in connection with the sacerdotal Silver Jubilee of the Very Rev. Father T. M. F. Long, O. M. I., Rector of St. Patrick's College, came off on Thursday last when the staff and students gathered to convey their felicitations. The Vice - Rector the Rev. Father B. A. John, O. M. I, spoke on the sterling qualities of the Rector and traced the progress of the College under his guidance. An address was read and a purse presented by the students; and Father Long later entertained the staff to a dinner. Messrs. P. J. Amirthanayagam and Mr. Jacob proposed the toasts.

#### Kallar Church Jubilee

The Jubilee of the Kallar Methodist Church was celebrated on the 2nd 3rd and 4th inst. There was a procession of witness when all the members went round, covering a distance of about three miles, singing Christian lyrics. A thanks-giving service was held on the 4th inst. presided over by the Rev, M. I. Newton Superintendent of the Circuit, when an interesting history of the Church was read by the Rev, R. V. Thambipillai. Rev. S. George Mendis Chairman of the Ceylon Provincial Synod and theRev. James S. Mather, Chairman of the North Ceylon District addressed the gathering. After this service, there was a Fellowship Lunch, followed by a sports meet, and a variety entertainment. Kallar is a strong Methodist centre in the Eastern Province.

#### The Salvation Army

It is learnt that on July 2 this year, the Salvation Army will be 80 years old. It commenced its work in 1865 when William Booth began to preach on Mile End Waste, London, William Booth died in 1912 and since then four other generals have controlled this world-wide army. Arrangements are being made to celebrate the 80th Birthday in a fitting manner. His Excellency the Governor is expected to preside at a Thanks-giving meeting to be held at the Booth Memorial Hall in Colombo.

#### New School at Delft

It is understood that "Sellammah Vidyasalai," Delft, founded by Mrs. S. Nagendrar, the first Lady Chairman of the Village Committee of Delft, has been recognised and registered as a grant-in-aid school as from the 1st of June, 1945.

#### Villundi Crematorium Shooting Tragedy

The case of murder arising out of the Villundi Cremation shooting tragedy, which occurred during the cremation of a woman of a "depressed class" has been taken up for trial at the Colombo Assizes before Dr. R. F. Dias Bandaranaike, and an English-speaking Jury.

The accused are Somasunderam Rajaratnam alias Chettiar. Subramaniam Sathasivam, Thambipillai Arulasa, Eliyathamby Subramaniam alias Maniam. and Kanagasabai Sanmugam alias Konar Sanmugam.

They are charged with being members of an unlawful assembly on September 26 last year at Villundi in Jaffna, and with having committed the murder of Mudaly Sinnatamby.

The trial is proceeding.

#### The Law Society of Ceylon

The Second Annual General Meeting of the Law Society of Ceylon was held at the District Court, Colombo, on Saturday, 16th June, 1945, at 10.30 a. m. Mr. J. C. Kadirgamar, President, presided and 80 Members representing Colombo and the various outstations were present.

The Annual Report of the Council for the year 1944 was tabled. Mr. Cyril R. de Alwis proposed and Mr. T. E. D. Pieris seconded that the same be adopted. The Balance Sheet and Income and Expenditure Account for the year 1944 was tabled. Mr. E. W. Seniviratne proposed and Mr. F. A. C. Tirimanne seconded that the same be adopted.

A statement was tabled regarding the progress made in the Incorporation of the Law Society of Ceylon,

The Meeting was followed by a Lunch at the G. O. H. attended by nearly 80 members.

#### Wedding

The marriage was solemnised last Friday at the S. I. U. C. Church at Chavakachcheri of Miss Kanagamany Chelliah and Mr. Henry Selvarajah, Preacher, Alaveddy Church. Rev. B. C. D. Mather officiated, assisted by Rev. S. T. Aseervatham. Rev. J. V. J. Arnold preached the homily. At the reception held at the bride's residence, Rev. K. A. Kandiah proposed the toast of the bride and bridegroom, supported by Rev, G. D. Thomas and Mr. J. Mills. The bride groom replied thanks.

### INDIAN

#### St. Augustine's Bible

It is learnt that when Dr. Geoffrey Francis Fisher was enthroned as Archbishop of Canterbury recently, he took the oath on the book of the Canterbury Gospels used at the enthronement of Archbishops in the Middle Ages. This historic manuscript is believed to be the very book sent by Pope Gregory the Great to St. Augustine, first of the long line of Archbishops of Canterbury. It remained at Canterbury until 1575 when Archbishop Matthew Parker gave it to Corpus Christi College, Cambridge. It was lent by the College library for the occasion of Dr. Fisher's enthronement.

### GENERAL

#### First Woman Magistrate

The Home Office in London has made history by appointing Miss Sybil Campbell Stipendiary Magistrate in succession to Mr. Arthur Morley, K. C. Miss Campbell was born in Ceylon in 1889. From September 1939 until the end of last year she was attached to the Ministry of Food in which connection she helped to smash the Black Market. So successful was she in discovering illegal practices in the sale of food that she earned for herself the reputation of "Britain's No. 1 food detective."

UDUVIL OLD GIRLS' RE-UNION

The 24th Annual Celebrations of the Uduvil Old Girls' Association will be held at Uduvil on Saturday the 30th of June.

Old Boys, Husbands of Old Girls and Friends are cordially invited to tea, the public meeting and the entertainment.

Kindly keep this day Free.
No individual invitations.

PROGRAMME

10 a. m. Praise Service.
11 a. m. Demonstrations of school activities.
1 p. m. Lunch.
3 p. m. Business Meeting
4.30 p. m. Tea.
5.30 p. m. Public Meeting.
6.30 p. m. Entertainment.

R. Suppiah,
Secy., U. O. G. A.

**For Sale**

BUGGY CART AND BULL

Good buggy cart Rs. 350,
Good white coast bull Rs. 550.

Apply to:—
Muhandiram Amarasingham,
Uduvil

24.1

#### ORDER NISI

In the District Court of Jaffna

In the matter of the estate of the late Nagamuthu Ponnambalam of Colombogam. Deceased.

Ratnam widow of Ponnambalam of Manipay.

No. 321 Testy.

1. Thyavathi.
2. Thyananthan.
3. Pathmanathan and
4. Pathmavathi, minor children of Ponnambalam appearing by their guardian ad-litem.
5. Sinnathamber Sivapathasundram all of Manipay. Respondents.

This matter coming on for disposal before H. A. de Silva Esquire, District Judge of Jaffna on the 6th day of March 1945 in the presence of Mr. J. F. Ponnambalam, Proctor, on the part of the Petitioner and the Petition and affidavit of the petitioner abovenamed dated 5th March 1945 having been read: It is ordered that the 5th Respondent abovenamed be appointed guardian-ad litem over the abovenamed first four minor Respondents for the purposes of these proceedings and that the Petitioner abovenamed as the widow of the abovenamed deceased be granted Letters of Administration to the abovenamed estate unless the respondents or any other person or persons interested shall on or before 27th June. 1945 show sufficient cause to the contrary.

Sgd. S. J. C. Shockman,
District Judge.

Drawn by
Sgd. J, F. Ponnambalam,
Proctor for Petitioner.

24-2.

TO BE RELEASED SHORTLY!

"DRAVIDA"

A history of the Dravidian Race from the Mohenjo-Daro period to the British period, with Maps and Illustrations

BY E. L. TAMBIMUTTU.

FOREWORD BY K. A. NILAKANTA SASTRI, M. A., Professor of Archaelogy and History, Madras University.

"The author deserves a word of thanks......this is the first book I have seen which seeks to satisfy a want that has been felt for some years."—PROF. NILAKANTA SASTRI.

"It is a clear and succinct account of the history of the Tamil race......"—REV. FR. GNANA PRAGASAR, O. M. I.

*Advance Bookings at Rs. 4 per copy: (Postage cts. 25)*

GENERAL PUBLISHERS LTD.
20, Parson's Road, Fort, Colombo—P. O. Box 305.

THE SHOP FOR THE BEST BOOKS

General and Regional Geography by *Unstead and Taylor.*
Geography of Ceylon by *E. K. Cook.*
Introduction to Tropical Botany by *M. J. Legog.*
Light and Sound by *Stewart.*
Heat, Light, Sound and Magnetism and Electricity by *Mackenzie.*
A Class Book of Physical Chemistry by *Lawry and Sagden.*
Introduction to Organic Chemistry by *E. J. Holmyard.*
Higher Algebra by *Hall and Knight.*
Pitman's Shorthand New Era Edition.

THE C. L. S. BOOK SHOP,
First Cross Street, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும்; பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

# புதினக் குறிப்புகள்

### மெதோடிஸ்த விழா

யாழ்ப்பாண மெதொடிஸ்த சபையின் வருடாந்த விழா இந்த மாதம் 27 ம், 28 ம், 29 ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

1814 ம் ஆண்டு ஆனி மாதம் 29 ம் திகதி முதன்முதல் மெதொடிஸ்த மிஷனரிமார் இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு வந்த தினத்தின் ஞாபகார்த்தமாக இந்த விழா வருஷா வருஷம் கொண்டாடப்படுகிறது.

27 ம் திகதி பின்னேரம் 3.30 மணிபோல் ஸ்தோத்திரப்பலிக் கூட்டம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

28 ம் திகதி சாயந்தரம் 7 மணிபோல் "Victory" Concert நடைபெறும்.

29 ம் திகதி பகிரங்க கூட்டம் நடைபெறும்.

### விவாகம்

சாவகச்சேரித் தேவாலயத்திலே ஒரு பரிசுத்த மெய்விவாகம் நிறைவேற்றப்பட்டது. மணமகன்: தென் இந்திய ஐக்கிய யாழ்ப்பாணச் சபாசங்கத்தின்கீழுள்ள அளவெட்டிச் சபையில் ஊழியம் புரிந்துவரும் திருவளர் செல்வன் யோசேவ் ஹென்றி செல்வராஜா. மணமகள்: சாவகச்சேரிப் புகையிரத நிலையத்தின் தலைவர் திரு. A. C. கல்லையாவின் கனிஷ்ட சகோதரி திருவளர் செல்வி மேரி கனகம்மான் செல்லையா. விவாக ஆராதனை கனம் S. T. ஆசீர்வாதம், கனம். J.V.J ஆணல்ட் என்பவர்களினுதவியோடுசபைப்போதகர் கனம்.B. C. D. மாதர் என்பவரால் நடத்தப்பட்டது. அதன்பின் மணமகளின் சகோதரன் இல்லத்தில் வந்து குழுமினோருக்குச் சிற்றுண்டி பானம் வழங்கப்பட்டன. அத்துடன் வந்துகூடிய சபையாரின் நாமத்திலே மணமகாருக்கு நல்லாசி கூறப்பட்டது. தம்பதிகள் சர்வபாக்கியம்பெற்று நீடூழி வாழ எம்பெருமான் கிருபை பாலிப்பாராக.

### சிம்லா ஆலோசனைக் கூட்டம்

இந்தியாவின் அரசியற் கஷ்டங்களை நீக்கும் நோக்கமாகச்செய்யப்படும் முயற்சிகளிலொன்று இராஜ பிரதிநிதி சிம்லாவிலே கூட்டவிருக்கும் இந்திய தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம். இக்கூட்டத்தை வயிஸ்ரோய் குறித்த திகதியிலே வைக்க முடியாதென மகாத்மா காந்தி அறிவித்திருக்கின்றார். கொங்கிறெசின் (Working Committee) கூடித் தங்கள் எண்ணங்களை அறிந்த பின்பே அக்கூட்டத்தை வைப்பது புத்தி. காரியத்தை நடத்துகிற அந்தக் கொம்மிற்றி இன்னும் கூடி வராததால் அந்தத் திகதியைப் பின்போட வேண்டுமென்பது மகாத்துமாகாந்தியினுடைய எண்ணம். அப்படியே அதை அவர் வைஸ்ரோய்க்கு அறிவித்திருக்கின்றார்.

ஆனாற் பல நியாயங்களினிமித்தம் அந்த ஆலோசனைக் கூட்டத்தை ஜூன் மாசம் 25ம் திகதி வைப்பதே அவசியமென இராஜப் பிரதிநிதி உறுதி கிறின்றார்.

### இந்திய தலைவர்களின் விடுதலை

பின்னே சொல்லப்படும் இந்திய தலைவர்கள் 15 ம் திகதியோடு விடுதலையாக்கப்பட்டனர்.

ஜவஹர்லால் நேரு, Dr. இராஜேந்திர பிரசாத், ஆச்சாரிய நரேந்திரதேவ், மௌலானா அபுலகலாம் அஜாத், சார்தார் வல்லபாய் படேல், சங்கா ராயோ தேயோ, ஆச்சாரிய J. B. கிரிதலானி, ஜண்டித ரவிஷங்கார் ஹுக்கில, Dr. பட்டபாய் சித்தராமையா என்பவர்கள்.

### இந்தியாவிஷயமாய் அரசபெருமானின் ஆவலான நம்பிக்கை

பிரித்தானிய இந்தியாவின் அரசாங்கத்தோடு கலந்துபேசும்படி அழைக்கப்பட்ட இந்திய பிரதானிகள் அந்த அழைப்பைச் சட்டைசெய்வார்களென்னும் ஆவலான நம்பிக்கையை அரசபெருமான் வெளியிட்டிருக்கின்றார். இந்த அழைப்பை அவர்கள் ஒப்புக்கொள்வதினுல் யப்பானிய யுத்தத்திலும், யுத்தத்தின்பின் நவ உலகத்தையாக்குவதிலும் அவர்கள் ஒத்துழைப்பு சமக்ககப்படும்.

### இந்தியாவுக்கு உவேவேலின் அரசியல் ஒழுங்கு

பார்லிமெந்தில் திரு. லியோபோல்டு அமெரி என்பவராலும், டெல்கியில் உவேவெல் பிரபுவாலும் ஏககாலத்தில் அறிவிக்கப்பட்ட இந்திய அரசியல் ஒழுங்கின் சாரம் எதுவெனில்: இராச பிரதிநிதியின் கருமகர்த்தர் சபையில் இராச பிரதிநிதியையும், சேனபதியையுந் தவிர்த்த ஏனையோரெல்லோரும் இந்தியர்களாயிருப்பது. இந்த இந்தியரெல்லோரும் பிரித்தானிய இந்தியாவிலுள்ள பெரிய பிரிவினரிலுமிருந்தும், தொழில்துறைகளிலுமிருந்தும் தெரியப்பட்ட பிரதிநிதிகளாவர்.

யப்பானிய யுத்தம் முடிவுக்கு வரும் வரையும் மகா பெரிய மாறுதலொன்றுஞ் செய்யப்படக் கூடாதென்பது பிரித்தானிய அரசாங்கத்தினுட்கருத்தாகும்.

இந்த இடைக்காலத்தில் பிரித்தானிய அரசாங்கமும், இராச பிரதிநிதியும் இந்தியரின் ஒத்துழைப்பைப் பெற்று அரசியலை நடத்தப் பிரயத்தனப்பட்டனர். இப்போது வெளிப்படுத்தப்படும் ஒழுங்கு 1942 ம் ஆண்டு கிரிப்ஸ் என்பவராற் கொண்டுவரப்பட்ட ஒழுங்கின் ஓர் புதிய பிரதிதான். அதிற் சொல்லப்பட்டது பின்வருமாறு:

"தற்போது இந்தியாவைப் பயமுறுத்திக்கொண்டிருக்கும் இந்தப் பயங்கரகாலத்தில், புதியவோர் அரசியற் சட்டம் கிருபிக்கும்வரையும், பிரித்தானிய அரசாங்கம் தங்களது யுத்த முயற்சியின் ஓர் பாகமாக இந்தியாவின் பரிபாலனத்துக்கு பொறுப்பாயும், அப்பரிபாலனத்தை ஆண்டு நடத்துகிறதாயுமிருக்கவேண்டியது அத்தியாவசியகம். ஆனால் யுத்த முயற்சியையும், இந்தியாவின் எல்லா வகையான விருவாயில்களையும் பூரணமான நிலைக்குத் திட்டப்படுத்தி நடத்துவது இந்தியரின் ஒத்துழைப்போடு இந்திய அரசாங்கஞ் செய்யவேண்டியது. மேலும் இந்தியரின் எல்லாப் பிரிவானவரின் தலைவர்களின் சங்கங்களினது, பிரித்தானிய சாம்ராச்சியத்திலும், ஐக்கிய ட்சியாரின் சகங்களிலுமுள்ளவர்களினதும் நல்ல ஒத்துழைப்பைப் பிரித்தானிய அரசாங்கம் விரும்பிக் கேட்கின்றது. இந்தியாவின் வருங்கால சுயாதீனத்துக்கு வேண்டிய விசேஷ காரியங்களைக் கொடுப்பதில் தாங்கள் செய்யவேண்டியவற்றைச் செய்ய இதனாலே அவர்கள் இயன்றவர்களாவார்கள்" என்பது.

புதிய டெல்கியிலிருந்து ஒலிபரப்பி மூலமாய் இராச பிரதிநிதி கொடுத்த அறிவித்தலின்படி: ஜூன் மாசம் 25 ம் திகதியன்று சிம்லாவிலே ஓர் சமாசங் கூடும். இது பிரித்தானிய அரசாங்கத்தின் பூரண உத்தரவோடு நடைபெறுகின்றது. மாகாணங்களிலும் மத்திய தானங்களிலுமிருந்து இந்திய தலைவர்கள் இச்சமாசத்துக்கு அழைப்புப்பெறுவர். ஓர் புதிய சட்டசபையை யாக்குவதே இச்சமாசத்தின் நோக்கம். இராச பிரதிநிதியையும், சேனபதியையுந் தவிரச் சட்டசபையின் மற்ற அங்கத்தினரெல்லாரும் இந்தியராயிருப்பர். பிரித்தானிய இந்தியா விஷயமாய்ச் சர்வ வெளிக் காரியங்களும் சட்டசபையின் ஒரு அங்கத்தினர் பொறுப்பில் இருக்கும். மற்றைய நாடுகளிலிருப்பது போல இந்தியாவிலும் British High Commissioner ஒருவர் இருப்பர்.

### மகா அத்தியட்ச குருவின் நியமனம்

இந்தியா, பர்மா, இலங்கை என்னுமிடங்களிலுள்ள ஆங்கிலேய சபையின் சிரேஷ்ட குருவை (Metropolitan) நியமிக்கும் Synod கூட்டம் கற்குத்தாவிலே ஜூன் மாசம் 25 ம் திகதி நடைபெறவிருக்கின்றது. அதற்குச் சமூகங்கொடுக்கும்படி கொழும்பு அத்தியட்சர் மகா கனம் C. D. ஹோர்சிலி விமானம்மூலமாய்ப் போய்விட்டார். அந்த காலை கினைத்துச் செபிக்கும்படி எல்லாச் சபைகளுங் கேட்கப்படுகின்றன. இந்நியமனம் சென்ற காலங்களிலே அரசாட்சியாரால் செய்யப்பட்டு வந்தது. 1931 ம் ஆண்டு கிருபிக்கப்பட்ட Church of India பிரமாணத்தின்படி அந்த நியமனம் இனிமேல் இந்தியா, பர்மா, இலங்கையின அத்தியட்சர் மாராலும் டையேசிசன் சங்கப் பிரதிநிதிகளாலும் நடத்தப்படும்.

### சன்பிறன்சிஸ்கோவின் கடைசிப் புதினம்

கடைசியாய்த் தீர்மானிக்கப்பட்ட விஷயங்களிற் தங்கள் சம்மதத்தைத் தெரிவிக்கிறதும், லீக் ஒவ் நேஷன்சுடைய திட்டத்தை இந்தபாஷைகளிற் திருப்பி, அதுமூலப்பிரதியோடு ஒப்பிட்டுச் சரிபார்ப்பதைத் தீர்ப்பதுமே சன்பிறன்சிஸ்கோ மகாநாடு செய்து முடிக்கவேண்டிய கடைசியான அலுவலெனப் பொல்ஸ்கொற்றன்சின் என்பவர் எழுதியிருக்கின்றார். கிட்டத்தட்ட இரண்டு மாதங்களாகத் தாங்கள் தர்க்கித்து முடிவுக்குக் கொண்டுவந்தவற்றைப் பிரதிஸ்தர்கள் திருப்பிப் பார்த்து முடித்திருக்கின்றார்கள். இத்தீர்மானங்கள் ஓர் நவ உலகையாக்கியிருப்பது மாத்திரமல்ல, ஹிற்லருடைய புதிய உலக ஆகாயக் கோட்டையையுந் தகர்த்துவிட்டன.

### சமய சுயாதீனம்

பம்பாய் இந்திய கிறிஸ்தவ சமாசத்தில் மேலே சொல்லிய விஷயத்தைப்பற்றி நிறைவேற்றப்பட்ட நிர்ணயம் பின்வருமாறு:—

"சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், நமது கர்த்தராகிய யேசுகிறிஸ்துவினால் வரும் இரட்சிப்பின் அறிவுக்கு மற்றவர்களைக்கொண்டுவரவும் ஒவ்வொருகிறிஸ்தவனுக்குமிருக்கும் பயபக்தியான கடமையையும் உத்தரவாதத்தையுந் தவிர, கடவுளை ஆராதிக்கும் விஷயத்தில் மாத்திரமல்ல, பிரசங்கிக்கிறதிலுமிருக்கும் சமய சுயாதீனம் ஒவ்வொரு தனியாளுக்குமுரிய பிறப்புச் சுதந்தரமாகும். இதை நிலைநிறுத்தும்படிக்கே சென்ற ஈராயிரம் ஆண்டுகளாகக் கிறிஸ்தவ இரத்தச்சாட்சிகள் தங்கள் உயிரைத் தத்தஞ்செய்திருக்கின்றனர். இந்தக் கிறிஸ்த சுயாதீன விஷயத்தில் எவ்வகையான இளக்காரமுமிருக்க முடியாதென்பதைப் பூரணமாய்த் தெரிவிக்கிறோம்" என்பதாம.

### காந்தியும் உவேவேலுஞ் சந்திப்பு

"உயர்ந்தஜாதி இந்துக்கள்" என்ற சொற்றொடருக்கு இராச பிரதிநிதி கொடுத்த பொருள் காந்திக்கும் கொங்கிறெஸ் தலைவருக்குந் திருப்திகொடுக்கவில்லை, ஆனால் இராச பிரதிநிதியினுடைய சிநேகபாந்தமான சொற்களும மன உண்மையான தன்மையும் எலலோருக்கும் அதிக திருப்தியையும் சந்தோஷத்தையுங் கொடுத்திருக்கின்றது. ஜூன் மாசம் 24 ம் திகதி சிம்லாவில் இராச பிரதிநிதியைச் சந்திக்க மகாத்மா காந்தி நிச்சயமாகப் போவார். வைஸ்றோயைக் காண்பதற்கு முன் காந்தி கொங்கிறெஸ் தலைவர்களைக் கண்டு, அவர்கள் எண்ணங்களையெல்லாம் அறிந்து ஆயத்தமாகியே போவார்.

கொங்கிறெஸ் ஒரே ஒரு பகுதியாராலாக்கப்பட்டவோர் ஸ்தாபனமல்ல. அது எல்லா யார்க்கத்தாரையும், சாதியாரையுமடக்கியுள்ளது. அதின் அங்கத்தவர்கள் முஸ்லீம், இந்து, கிறிஸ்தவம் பார்சி முதலிய பல பிரிவாரையடக்கியது. ஆதலினால் சமயத்தையாதாரமாக்கிக் கிரியை செய்வதில் சாதித்துவ கொள்கைக்காரர் ஒத்துக்கொள்ளமாட்டார்கள் என்பது சார்தார் வல்லபாய் படேல் என்பவரின் எண்ணமாகும்.

### துலோஸ்றர் பிரபுவைக் கொல்லும்படி பயமுறுத்தல்

ஜூன் மாசம் 7 ம் திகதி பிறிஸ்பேன் நகரத்தின் வழியாற் போகும்போது, குலோஸ்றர் பிரபுவையும் பத்தினியையும் குண்டினாற் கொன்று, தானுந் தன்னைக் குண்டினாற் கொன்றுபோடுவேனெனக் கையெழுத்தில்லாமல் ஒருவன் எழுதியிருக்கின்றான். ஆகையால் அவர்களைப் பாதுகாக்க எல்லா முயற்சியுஞ் செய்யப்படுகின்றது.

### 750 பேரைக் கொண்டுபோகக்கூடிய விமானம்

கலிபோர்ணியாவிலுள்ளவோர் தொழிற்சாலையில் 750 யுத்தவீரரையும், அவர்கள் மூட்டைகளையும் கொண்டுபோகக்கூடியவோர் விமானங் கட்டுகிறார்களாம். அந்த விமானத்தின் செட்டை நீளம் 300 அடி. அதற்கு எட்டுச் சூத்திரங்களுண்டு. அது கொண்டுசெல்லும் பெற்றிறல் எண்ணை உலகத்தை எட்டரை முறை சுற்றிவரப் போதியது.

### யுத்தப் புதினங்கள்

Super Forts யப்பானின் வேலைஸ்தலங்களை யெல்லாம் எரித்துக்கொண்டு போகின்றது. நான்கு பெரிய இடங்கள் தாக்குற்றன. சென்ற 18ம திகதி 400 க்கு மேற்பட்ட Super Fortresses 3000 தொன் நிறையுள்ள குண்டுகளை 4 விசேஷ இடங்களிலே பொழிந்தன. இப்பட்டணங்களில் இரண்டு கியுஷியுவிலும், இரண்டு ஹொன்ஷிய என்ற தீவிலும் இருக்கின்றன.

### மூவர் மகாநாடு

முந்திய காலத்தில் ஜர்மன் அரசர்களின் இருப்பிடமாகிய பொற்ஸ்டாம் (Potsdam) என்னுமிடத்திலேதான் மூவர் மகாநாடு நடைபெறும். இது பெர்லின் நகரிலிருந்து 15 மைல் தூரத்திலுள்ளது. அரண்மனை நல்ல நிலைபரத்தி லிருக்கின்றது மகாநாட்டுக்குப் போகின்ற எல்லோருக்கும் போதியளவு இடமுண்டு. அங்கு செல்கின்றவர்கள் லேசிலே ஒரு விக்கினமும் நேராது பாதுகாக்கப்படக் கூடும்.

சன்பிறன்சிஸ்கோ ஆலோசனைக் கூட்டத்தில் ருஷியர் மூலமா யின்னுந் தொந்தரவிருக்கிறதாகச் செய்தி வந்திருக்கின்றது. கருமகர்த்தர் சபைக்கு திரு எட்வேட் ஸ்றெனியஸ்தான் தலைவர். இத்தப்பிணக்கைக் கூடிய சீக்கிரத்தில் தீர்த்துப்போட ஒரு உபகாரியஸ்தர் சபை நியமிக்கப்பட்டிருக்கின்றது.

—ஒக்கினவாவில் யப்பானிய துருப்புகள் சிதறடிக்கப்பட்டுச் சின்னபின்னமாகிப் போய்விட்டன. அதே தருணத்தில் அமெரிக்கரின் 10 வது சேனைத் தலைவனாகிய லைசமன் பொலிவர் பக்னர் கொல்லப்பட்டுப்போயினர். அட்மிறல் நிமிற்ஸ் இதை அறிவித்திருக்கின்றார் இதுதான் முடிவென்பதைப்பற்றிக் கொஞ்சமேனும் ஐயமில்லை.

—மக் ஆதருடைய அறிக்கையின்படி லூஜன் என்னுந் தீவிலே அதிக முன்னேற்றமுண்டு.

### திரு. G C. S. கோறியா ஏறிவந்த விமானம்

கைத்தொழில் வர்த்தக இலாகா மந்திரி திரு. G. C. S. கொறியா என்பவர் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டுவிட்டார். அவர் ஏறிவந்த விமானம் 18 ம் திகதி இலங்கைக்கு வந்திருக்கவேண்டியது. ஆனால் அது இன்னும் வந்துசேரவில்லை. அவ்விமானமெங்கே யென்பதைப் பற்றிய ஆராய்ச்சி நடைபெறுகின்றது.

70 வருஷங்களுக்கு மேற்பட்ட அனுபவம் . . .



1872 ம் ஆண்டுக்கு முன் இங்கிலாந்திலே முதல் ஹம்பர் துவிச்சக்கரம் செய்யப்பட்டது. ஹம்பர் துவிச்சக்கரத்தில் இறப்பட்ட வரிகளும், பெலனும், இலேசும் இன்று அதனுடைய நீண்ட அனுபவத்தையும் அது செய்கை பண்ணப்பட்ட திறமையையும் காட்டுகின்றது.

ஹம்பர் துவிச்சக்கரத்தின் வரத்து மட்டுப்படுத்தப்பட்டாலும் அதற்குத் தேவையான மறுபகுதிகள் கிடைப்பதனால் ஹம்பர் துவிச்சக்கரத்தை யுடையோர் தொந்தரவு இல்லாமல் அதைப் பாவிக்கலாம்.

ஹம்பர்

மில்லார்ஸ் லிமிடெட், ஹம்பர் துவிச்சக்கரஏஜண்டுகள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஆசிமல்குக அன்பு பெருகுக
தேசமெங்கணுந் தீமையருகுக
பாசநீக்கிப் பவித்திரமேயருள்
யேசு நாமமே என்றென்று மோங்கவே

உ த ய தா ர கை

1945 ம் ஞு ஜுன் மீ 22உ

## வைத்திய தேவைகள்

தற்கால நிலையைக்கொண்டு தீர்ப்புச்செய்யவேண்டுமானால், இப்போது இலங்கையில் வைத்திய உதவிக்குரிய வசதிகள் போதியதல்லவென பிரித்தானிய வைத்திய சங்கத்தாரால் நியமனம் பெற்ற உபகாரியஸ்தர்கள் அனுப்பிய யாதஸ்தியிருந்து விளங்குகின்றது. சராசரி 500 பேருக்கு ஒரு படுக்கை விதமாய் இலங்கை முழுவதிலுமுள்ள வைத்திய ஸ்தாபனங்களில் 12,000 படுக்கைகள் மாத்திரமுண்டு. ஆங்கிலேய அமெரிக்க தேயங்களின் நிலைபின்படி பார்க்கில், 200 பேருக்கு ஒரு படுக்கை விகிதமாக 30,000 படுக்கைகளிருக்கவேண்டும். ஏனெனில் இலங்கையின் குடிசனத்தொகை 60,000,00 ஆகும். அதிகமான வைத்திய நிலயங்களை மாத்திரம் ஆக்குவது போதியதல்ல. தற்போதிருக்கும் பலவகையான வைத்திய நிரையினரானவர்கள் தொகை கொஞ்சமும் போதியதல்ல. இலங்கையில் ஒவ்வொரு 9000 பேருக்கு ஒரு வைத்தியன்தானுண்டு. ஆனால் இருக்கவேண்டியது ஒவ்வொரு 2000 பேருக்கு ஒரு ஆள் விதம். இக்குறைவை நிவிர்த்திக்க வேண்டுமாயின், இனிவரும் 10 வருடங்களுக்கு வருடத்துக்கு 100 புதிய பயிற்றப்பட்ட வைத்தியர்களை அனுப்பிக்கொண்டேயிருக்க வேண்டும். இப்போது வைத்தியப் பகுதியார் வருடத்துக்கு 25 பேரை மாத்திரம் அனுப்பிக்கொண்டிருக்கிறனர். இக்குறைவுகளோடு கூட பயிற்றப்பட்ட கைத்தாயர்கள் தொகை மிகக் குறைவு.

இக்குறைவை லேசிற் சரிப்படுத்தல் கூடிய காரியமல்ல, மேற்கூறிய யாதஸ்திற் கூறப்பட்ட அபிப்பிராயங்களைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். பிரித்தானிய வைத்திய ஆலோசனைச் சங்கம் இலங்கையின் வைத்தியர்கள், வைத்திய சேவை, மற்றைய வைத்திய விஷயங்களெல்லாவற்றோடும் சென்ற 60 வருடங்களாக அதிக நெருங்கிய சம்பந்தமுடையவர்களாய்க் காரியங்களை நன்குக அறிந்த, சுயாதீனமான வைத்திய சிகாமணிகளின் கூட்டந்தான் British Medical Council என்பது. அவர்கள் அபிப்பிராயம் நமது சிந்தனைக்குரியதாக வேண்டும். ஆதலால் அவர்கள் சொல்வதை ஆராய்ச்சி செய்து கூடிய சீக்கிரத்திலே அவைகளை நடைமுறையில் கொண்டுவருதல் மிக அவசியம். இலங்கையின் குடிசனத் தொகை கூடிக்கொண்டே போகின்றது. ஆதலினால் இலங்கையின் குடிசனங்களுடைய சுகாதார விஷயங்கள் சரியானபடி கொண்டுவரப்படல் வேண்டுமானால், தற்காலத்தில் நடைபெறுவதிலும் பார்க்கக் கூடிய தொகையான மாணவரைக் கொழும்பிலுள்ள பெரிய வைத்திய நிலயத்திற் பயிற்றவேண்டும். வைத்திய நிலயம் பிரமாண்டமான கட்டடத் தோற்றமாய் மாத்திரமிராமல் அது ஒருமாதிரியான ஸ்தாபனமாக இருக்கவேண்டும். தற்காலத்துக்கேற்றபோதிய உபகாரணங்கள் சவதரித்து வைக்கப்படல் வேண்டும். கொழும்பிலுள்ள வைத்திய நிலயம்போன்ற நிலயங்கள் ஒவ்வொரு மாகாணத்திலும் ஸ்தாபனமாதல் அவசியம். அங்கும் விசேஷ வைத்தியர்களும் உபகாரணங்களும் வேண்டும். கைத்தாயர்களைப் பயிற்ற அநேக இடங்கள் நிறுவப்படல் வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு நல்ல சம்பளங் கொடுப்பதினால் திறமையுடையோர் இதற்கு இழுக்கப்படல் நல்லது. மேலே சொல்லப்பட்ட சகலஒழுங்குகளும் இனிமேலில்லையெனச் சொல்லப்படக்கூடிய ஆலோசனை கூறக் கூடியவர்களும் நடத்தக்கூடிய திறமைவாய்ந்தவர்களும் ஒருமித்திருந்து யோசனை செய்து நடபடிக்கைக்குக் கொண்டுவரல் வாய்ப்பாகும். பெரிய யாதஸ்துகளும், பாரதம்போன்ற அறிக்கைகளும் தவிர வேறொன்றுஞ் செய்யாவிடில், இன்னும் 10 வருஷத்துக்குப்பின்னும் இப்போ இருப்பதைவிடக் காரியங்கள் விசேஷமாயிராது.

## சுவிசேஷகனுடைய வேலை

ஓர் சுவிசேஷகனாகக் கடவுளால் அழைக்கப்படுவதுதான் எந்தக் கிறிஸ்தவனுக்கும் கிடைக்கக்கூடிய உன்னத சலாக்கியம். ஏனெனில் சுவிசேஷகன் கிறிஸ்து அனுப்பப்பட்டதுபோல் அனுப்பப்படுகிறான். ஒவ்வொருஆத்துமாவுக்காகவும் கடவுளுடைய இருதயத்திலே ஆவலான வாஞ்சையிருக்கின்றதுபோலச் சுவிசேஷகனுடைய இருதயத்திலும் அப்பேர்ப்பட்ட வாஞ்சையிருக்க வேண்டும். கடவுள் பாடுபடுகின்றாரென்பது பரிசுத்த வேதாகமத்திலுள்ள ஆழ்ந்த கருத்தடங்கிய உபதேசம். கடவுளுடைய இருதயத்திலே ஓர் சிலுவை இருக்கிறதென்பதைப்பற்றி அதிகம் எழுதப்படாவிடினும், அதிகம் பேசப்படாவிடினும் அது உண்மையே. எங்களுடைய கிறிஸ்த ஊழியங்களிலே கிறிஸ்துவை மையமாகக் கொள்ளுகிறதற்குப் பதிலாக எங்களை அதிகமாக்கிக் கொள்ளுகின்றோம். கெட்ட மகன் சரிதையிலே பேசப்படுகின்ற அண்ணனைப்போல நாம் இடைவிடாமல் "நான்" என்றதையே உறுத்திப் பேசுகின்றோம். "நான்" உம்மைவிட்டுப் போகவில்லை" "நான்" உமக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்யவில்லை' யென்று "நான்" "நான்" என்று பேசுகின்றோம். ஆனால் இளைய மகன் தூரதேசம் போனபோது தகப்பனுக்கிருந்த ஆழ்ந்த துக்கத்தைப்பற்றி அவன் எப்போதாவது நினைத்ததுண்டா? கெட்டுப்போன மகனின் தகப்பன் துயரத்தில் ஆழ்ந்திருந்தபோது எப்போதாவது அவனுக்கு ஆறுதல் சொன்னானா? இல்லை. கெத்செமெனேயில் எங்களுக்குப் பங்குண்டா? பாவத்திற் சிக்கின்ற மனுக்கள் பேரிற் கடவுளுக்கிருக்குந்துக்கத்தில் நமக்கும் பங்குண்டா? சுவிசேஷகன் கடவுளோடு துக்க மனுபவிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். "கடவுளுடைய நாமம் என்னில்மகிமையடையுமானால் George White field என்ற எனதுநாமம் அழியகடவதென்றார். George White field என்ற பிரசங்கி. கிறிஸ்துவினுடைய பாடுகளிற் பங்கடைவதுதான் சுவிசேஷ பிரபல்யத்துக்குரிய இரகசியம் என்று கலாத்தியர் நிருபம் 4, 19 சொல்லுகின்றது. "நான் மனமுறிவடையேன; ஆனாற் துடிப்பேன்: ஏனெனில் ஓர் புதிய சந்ததி பிறப்பதற்காக நான கர்ப்பவேதனைப் படுகிறேன்", என ஓர் சுவிசேஷகன் கூறுகின்றான். 21 வருஷ திருத்தொண்டின்பின் சுகங்கெட்டு ஜெர்மனிக்குத் திரும்பிய இன்னொரு மிஷனெரி பின்வருமாறு சொன்னார்:— "21 வருடங்களை இனியுங்கள். எல்லாத் துன்பங்களையும், அநுபவங்களையும், கப்பற் சேதங்களையும், அடிகளையும் எனக்கு மறுபடியுங் கொடுங்கள்; நான் இன்னுமோர் மிஷனெரியாகத்தான் போவேன்". ஏசாயா 53: 11 இதிற் சொல்லியிருக்கிறபடி, "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்," சுவிசேஷ பிரபல்ய இரகசிய மிதுதான்.

"ஞானோதய"

## இந்திய கிறிஸ்தவர்களும் அவர்கள் உரிமைகளும்

[நாக்பூரிலேயுள்ள வாலிப சங்க மண்டபத்திலே நடந்தவோர் கூட்டத்தில் ஸ்ரீ. இராஜகோபாலாச்சாரியரின் உபந்நியாசம்.]

(தொடர்ச்சி)

சிறுபான்மையினராயிருக்கிற கிறிஸ்தவர்களாகிய எங்களுக்கு என்னென்ன உரிமைகளைக் கொடுப்பீர்கள்? நமது நாட்டின் அரசியலில் என்ன பாகத்தை எங்களுக்குக் கொடுப்பீர்கள்? என்று நீவிர் கேட்பீர்களாக்கும். இது விஷயத்தில் நீவிர் பயப்படத் தேவையில்லை. உங்களது சனத்தொகை விகிதமாக உங்களுக்கு அரசியலில் பங்கு வழங்கப்படும். நீங்கள் நமது நாட்டுக்கு இன்றியமையாதவர்கள் என்பது எல்லோருக்கும் தெரியுமே. உங்கள் உரிமையை இல்லையென மறுக்க ஒருவனாலும் ஆகாது. தீண்டாச் சாதியானொருவன் கிறிஸ்தசமயாநுசாரியாய் வந்தவுடன், மற்றவர்களோடு அவனுக்குச் சம சுதந்தரங் கிடைக்கின்றது. ஹரிசனராயுள்ள தீண்டாச் சாதியான் இந்துவாயிருப்பின அவன் பொதுக்கிணற்றில் தண்ணீர் அள்ள உரிமைபெறான். ஆனால் கிறிஸ்தவனான உடனே அந்தப் பொது உரிமை அவனுக்குக் கிடைக்கின்றது. கிறிஸ்தவாகிய நீவிர் எல்லா இடங்களிலுஞ் சிதறியிருப்பதினால் வரும் நன்மை இதுதான். சமூக ஒழுங்கில் அதிக கீழ்த்தரமானவனும் கிறிஸ்த சமயத்தை அநுசரிப்பதினால், எல்லாச் சலாக்கியங்களுக்கும் உரிமை பெறுகின்றான். ஆதலினால் கிறிஸ்தவர்கள் தங்கள் சுதந்தரத்தை இழந்துபோவாரெனப் பயப்படுவது ஆதாரமற்றவோர் பயம்.

மேற்கூறிய விஷயத்தில் மூன்ஜி பண்டிதர் சொல்வது:

"தற்போது நமதுநாட்டில் மும்முரமாயெழும்புகின்ற தேசியம், தேசாபிமானமென்னும் இயக்கங்கள் சம்பந்தமாக இந்திய கிறிஸ்தவர்களாகிய நீவிர் முஸ்லிம்களைப்போல ஏனோதானோவென்றிராமலும், எதிராகக் கிரியை செய்யாமலுமிருக்கிறதைப்பற்றி நான் சந்தோஷத்தோடு அறிக்கை செய்கின்றேன். நீவிர் ஒடுங்கிய மனப்பான்மையுடையாராயிராமல், இந்தியா பிரிவுபடாது ஒரே தேசமாயிருக்க வேண்டுமென உறுதி நிலையினராயிருக்கின்றீர்கள். அதனால் மற்றைய சிறுபான்மையோருக்கு நல்லமாதிரியாயிருக்கின்றீர்கள். ஆதலினால் இந்துக்களாகிய எங்களோடு நீவிர் இரத்தசம்பந்தமுடையராய் வர நான் உங்களை வரவேற்கின்றேன். மனந்திரும்புகிற விஷயத்தைக் குறித்தும், மறுபடி இந்து சமயத்துக்குத் திரும்புவதைக் குறித்தும் பேசுகில், கிறிஸ்தவனுடைய முஸ்லிம் ஆவது ஒரு இந்துவைத் தனது சமயத்துக்குத் திருப்பவேணுமென உணர்ந்தால், அந்த உரிமை அவனுக்கிருக்க வேண்டும். சரியினமான கேள்விக்குரிய முறைகளைப் பாவிக்காவிட்டால், இந்துக்களும் கிறிஸ்தவர்களைத் தங்கள் சமயத்துக்குத் திருப்பும்படி கிரியை செய்யலாம். அது பிழையல்ல.

சென்ற பல நூற்றாண்டுகளாக இந்தியாவிலே, சமண மதம், புத்த மதம், சீக் மதம், சுபீர்பந்து போன்ற அநேக சமயங்களும், கிளைச் சமயங்களுந் தோன்றி, நன்றாய்ச் செழித்து வளர்ந்து, இந்தியாவை ஆட்சிசெய்து வந்திருக்கின்றன. இதைக் கர்வங்கொண்ட நிலை (Imperialism) யாக ஒருவரும் குற்றஞ் சொல்லவில்லை. கிறிஸ்தவம் விசேஷ கருத்திலே கீழைத்தேச சமயமாகும். அதன் ஸ்தாபகர் ஓர் கிழக்கிந்திய புருஷர். அவரது முதற் சிஷ்யர் யூதர்கள். அவர்களுங் குண (கிழக்கு) நாட்டார். அநேக நூற்றாண்டுகளுக்குப் பின்பு ஐரோப்பிய மிஷனெரிமார் வந்தனர். அப்படிப்பட்ட கர்வங்கொண்ட நிலை (Imperialism) சமயத்துட் புகுந்ததுண்டானால், அது அவர்களாலேயே வந்தது. இப்படிப்பட்ட ஐரோப்பிய மிஷனெரியை இந்திய கிறிஸ்தவர்கள் முழுவதாய்த் தவிர்க்க வேண்டும். அவர்களிலே தங்கியிராமல், பொருளுதவி முதலியவற்றை அந்நியர்களிடங் கேளாமல், இந்திய கிறிஸ்தவர்கள் சமணர், புத்தர், சீக்கர் சுபீர்பந்தரைப் போன்று தங்கள் சமயத்தைப் போதிக்கவும், அதைப் பிரசித்தி செய்யவும் உரிமையுடையராயிருக்கின்றனர். மற்றவர்களுக்கிருக்கும் இப்படிப்பட்ட உரிமையைத் தடக்கல்செய்யாதபடிக்கு மாத்திரம் கவனமாயிருக்க வேண்டும். இது விஷயமான எனது அபிப்பிராயத்தைத் திறந்தமனதோடு வெளியிடுகிறேன்."

## இலங்கைச் சேவிங் வங்கி
## SAVINGS BANK

இலங்கைச் சேவிங்வங்கியில் (Savings Bank) பணம் கட்டுபவரின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இந்தமாதம் 29ந் திகதி (29-6-45) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 – 45 மணியளவில் சேம்பர் ஆப் கோமேர்ஸ் (Chamber of Commerce) பொதுக்கூட்ட மண்டபத்தில் நடைபெறும்.

ஹென்றி அ. காமர்,
காரியதரிசி.

கொழும்பு.
13 – 6 – 45.

24—1.

## உடுவிற் பழைய மாணவர் கூட்டம்

உடுவிற் பழைய மாணவரின் 24 ம் வருஷாந்தக் கொண்டாட்டம் ஆனி மாதம் 30 ம் திகதி சனிக்கிழமை உடுவிலில் நடைபெறும். பழைய மாணவர் யாவரும் இந்தத் திகதியைக் கவனித்து, இக்கொண்டாட்டத்திற் பங்கு பெறும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிற்பகல் நடைபெறும் தேநீர், பகிரங்கக் கூட்டம், சங்கீத விழா முதலியவற்றில் பழைய மாணவர் (Old Boys) பழைய மாணவிகளின் கணவன்மார், சிநேகிதர் யாவரும் பங்குபெறும்படி அன்பாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தனித்தனி அழைப்புப் பத்திரங்கள் அனுப்பப்படமாட்டாது.

கூட்ட ஒழுங்கு:

காலை 10 மணி. ஸ்தோத்திர ஆராதனை.
காலை 11 மணி. பாடசாலையில் நடைபெறும் சில விசேஷ வேலைகள் காட்டப்படும்.
1 மணி. சாப்பாடு
பிற்பகல் 3 ,, காரியநிர்வாகக்கூட்டம்
4.30 ,, தேநீர் சிற்றுண்டி
5.30 ,, பகிரங்கக் கூட்டம்
6.30 ,, சங்கீத விழா.

R. Suppiah,
(Secy. U. O. G. A.)

23—2

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

The Morning Star

Friday, June 22, 1945.

## THE RE-EDUCATION OF GERMANY

When one looks at the grisly pictures published recently of the sadistic brutalities practised in German concentration camps, one wonders if such ghastly atrocities are possible in a civilised State in the twentieth century. Heinrich Heine, one of Germany's greatest poets, once wrote of his fellow countrymen thus: "Christianity has occasionally calmed the German love of war, but it cannot destroy that savage lust. Once the Cross, that restraining talisman is broken, the old Norse fury will take command.... The old gods will rise from forgotten ruins and rub the dust of a thousand years from their eyes. Thor will leap to life and his hammer will bring down cathedrals.... When the crash comes it will come like nothing ever heard in history. A drama will be performed which will make the French Revolution seem like a pretty idyll...." This dark vision of the shape of things to come seems to have wrung the sensitive soul of one whose passionate hope was that Germany would one day lead the peoples of Europe to a glorious regeneration. It was well for him that he died in 1856, long before the grim fate of the German people's own moulding overtook them. It is small wonder his books were burned and banned by the Nazis.

Whatever the grisly atrocities of the Nazis may portend, they are at bottom the evidences of a deep-rooted moral sickness in a people who have been for long the victims of a perverted creed. The destruction of the roots of this moral sickness should be the first step in any plan for the re-education of Germany.

At a conference of American Churchmen, organised by the Just and Durable Peace Commission of the Federal Council of Churches, Bishop Bromley Oxnam, one of the great leaders of American Church life, said: "There has been much criticism of Dumbarton Oaks on the alleged ground that it is but a return to power politics wherein three great powers are to rule the world. All politics deal with power. The primary issue is to bring power under control." It is the task of the Allied Nations to see to it that those legends about the invincibility of Germany and the Myth of the Master-race are buried beyond hope of resurrection and a new race of Germans reared who will regard their country's greatness as measured not by domination and over-lordship but by the service she may render to the whole family of mankind.

We need from Germany new industries of peace and refounded generation of scientists who will see their tasks as leaders of peace and not as fashioners of war. We need from Germany a great revival of the Arts which will add colour and romance to the story of mankind. For 30 years this great people has been dedicated to enterprises which produce death and destruction. Let it now begin to embark on those adventures which add lasting glory and honour to men.

We need from Germany a new generation of Musicians who, resuming the traditions of the great masters, will again stir the souls of men. Germany's devilish ingenuities have brought tragedy and suffering to countless homes. Not easily will all that be forgotten. But Germany herself can hasten the day of renewed friendship by a sincere and speedy adoption of civilised ways of life.

We need a new race of poets, painters, musicians and scientists who will arise in Germany to save the soul of a people from utter destruction and by a new enriching stream of the fine, the beautiful and the free, bring fresh life to all the world. It may indeed be that the land of Martin Luther will again produce a religious genius to bring his own people back to God. It will take a generation, perhaps, to accomplish this revolution, but unless it is accomplished, there is no hope of a peaceful world.

## ELECTION OF METROPOLITAN

Today ten Bishops of India, Burma and Ceylon will congregate in Calcutta to elect for the first time the Metropolitan of India. Dr. Westcott was the last Metropolitan of India to be appointed by the Crown. Since the passing of the Church of India Act of 1931, this duty and responsibility is laid upon the Bishops of India, Burma and Ceylon. In view of the importance of the election, a special prayer has been prepared for use in Churches today.

The election, we learn, is no simple process. It may take many days. Since the Metropolitan of India is also the Bishop of Calcutta, the election has to be by agreement between the House of Bishops and the Calcutta Diocesan Council which has elected an Electoral Body for the purpose. The Electoral Body and the House of Bishops will meet separately today. Provision is made in the constitution for consultations to take place during the course of the proceedings between the House of Bishops and the Electors of the Diocese of Calcutta. This is done by means of deputations of both bodies being selected.

The Metropolitan will be elected in a joint meeting of the two "Houses". A simple majority of those present in the House of Bishops and the same in the Council or its Electoral Body will determine the issue. Should the two "Houses" fail to agree on one and the same name, the final vote is taken at a joint meeting of the House of Bishops and the Electoral Body of the Diocese of Calcutta. Every Churchman is looking forward to the election.

## WHAT IS STALIN'S NEXT MOVE?

A memorable day for all time is May Day, 1945. It has seen the grand climax of the present war in Europe and, next door to us it prepared us for the joyful news of the capture of Rangoon and therewith the practical liberation of the whole of Burma. The amazing successes of the 14th Army in some of the worst country in the world for military operations, culminating in the reoccupation of the Burmese capital and paving the way for swift advances towards Quisling Siam and the rich peninsula of Malaya, have been eclipsed by the welter of historic and hair-raising events in Europe round about May Day. The Japs have now cause for frantic worry for the Rangoon port, left intact by the fleeing enemy, will soon be ready to start a stream of Allied supplies to the hitherto hamstrung China *via* the Burma Road. An aggressive offensive against the Japs in China is in the offing, writes "G. R." in *National Front.*

### Bewildering

The week following May Day in Europe has been thrilling in the extreme. The fall of Berlin to the Russians, Field Marshal Montgomery's grand victories in Northern Germany, the utter collapse of German resistance and surrender of millions of *Wehrmacht* soldiers and Staff officers, the signing of German surrender in North Italy and, above all, the ignominious exit of Benito Mussolini, the original author of Fascism, riddled with Italian partisan bullets in Milan after a summary trial, and the suicide of the Nazi arch-criminals Hitler, Goering and Goebbels,—all these in bewildering succession have indeed provided a veritable beanfeast to an astonished world. To crown all, came the news of the unconditional surrender of all German fighting troops tendered by Grand Admiral Doenitz, the new Fuehrer. Yet, like a forward child stilled by its own importunities, the peoples of the United Nations, after the prolonged toils of the war, have not been so much elated by these most-wished for happenings as irked by thoughts of the chaos in Germany and the stupendous task of restoration of order. This is just the time when Allied solidarity, which has been strong and stern all along, should not be split by German machinations.

### Don't Deserve Sympathy

It might be an unpleasant fact that a major portion of Europe has come under Soviet control. The Bolshevist bogey is very much in the air. The danger is the beaten Germans would now strain every nerve and bring into play all their whining skill to whip up hatred against the Russians and their political and social systems. Those who have read the writings of Ilya Ehrenberg and other Soviet authors on the beastly doings of the Germans in the heyday of their advance into Russia, have had corroboration in the pictorial descriptions of the horrors of the Nazi concentration camps officially publicised in India. A people who have tacitly acquiesced in the perpetration of such ghastly murders and tortures, do not deserve any iota of sympathy. These *herrenvolk* who set out to enslave other peoples and who have been baulked in their nefarious attempt by the combined wrath of the rest of the world, must taste the bitter cup of defeat and all the consequences of the mad adventures of their *Fuehrers* and *Gauleiters.* If the Russians want to wreak vengeance, nothing can stop them now.

### Soviet Ascendency

A noteworthy trend even in most liberated countries not under the Russian influence is the swing towards the Left. The recent municipal elections in France have displayed a distinct Leftist tendency. The Belgian Socialists supported by the Communists and Liberals, have demanded the abdication of King Leopold who has not yet returned to his country from German captivity. These parties have opposed a restoration of the old regime. Queen Wilhelmina, said to be popular in Holland, is bound to come back, but it is presumed the Dutch people are no less Leftist than the French and the Belgians. With the Russians astride most of the Continent, it would be a hazardous task for the Western Allies to replant the old regimes against the wishes of the peoples. The new Soviet budget maintaining the high war expenditure for another year and Marshal Stalin's decision not to demobilise the army can only be interpreted in one way: he wishes to keep his powder dry.

### Stalin's Next Move

And the San Francisco Conference, where 46 United Nations have gathered to hammer out a world security organisation, has not fallen into line with most of Moscow's wishes. It would be interesting to watch Marshal Stalin's next move.

—*Sunday Herald.*

## MR. C. RAJAGOPALACHARIAR ON INDIAN CHRISTIAN FUTURE

(Continued from our issue of 15—6—45.)

[Mr. C. Rajagopalachariar addressed recently a meeting of Indian Christians at the Robertson Y. M. C. A., Nagpur. The following summary made from a verbatim report appears in the *Dnanodaya.*]

The Harijan untouchable who is a Hindu cannot touch this water, but the moment he is baptised he uses the water without the help of any constable. That is the good influence you spread by being everywhere, and the social law itself helps you. If a Hindu untouchable becomes a Muslim he is entitled to 'touch'! Similarly about Christians. Therefore even the lowest in the social scheme in India's dark corners can by becoming a Christian enjoy these privileges. So why do you fear that a person belonging to the Christian religion will be tyrannised over?

*A Practical Politician's Advice*

I talk to you as a practical politician. You have every chance to enjoy more than your arithmetical share of rights. 'Weightage' you will have everywhere because of your importance in these respects. Even now if you judge things by their trends, you will enjoy a unique position, in becoming the arbitrators. Stick to your minorities. But don't increase them too much. A select and well qualified minority as you are, you have every chance of becoming trusted referees in all the quarrels of India. This is not a mere ideal; it is the actual trend. You have some disadvantages, in certain matters, but in the matter of becoming referees of disputes in the country you will enjoy a privileged position, and I hope you will be good judges. Don't be bad judges. Sir Tej Bahadur Sapru is trying to get the best names possible for his important Committee of Conciliation and I think there will be good number of Christians and Parsees in it. So you will have more than your fair share of political influence which is the uppermost thing in the minds of the secretaries and presidents of organisations. Certainly you will never be allowed to have less than your due share.

—*The Guardian.*

THE GREEN MEMORIAL HOSPITAL

Pupil Nurses will be admitted to the Hospital for training during June and July this year.

Please apply to:-

**Mrs. S. T. Aseervatham,**
Manager, Pierce School of Nursing, Manipay.

24—2.

SALT TRANSPORT

No. Rv. 524.

The Government Agent, N. P., will receive tenders up to 12 noon on Friday, 29 June, 1945, for the service of transporting salt from the salt forming areas at Karanavai and Vellapperavai to the salt storage platform at Tondaimanar and from the salt forming areas at Irupalai to the storage platform at Chiviyatheru. Further particulars may be obtained from the Jaffna Kachcheri.

A. Muthuthamby,
for G. A., N. P.

Jaffna, 6 June, 1945.
24—1.

Printed and published for the American Ceylon Mission by Mr. V. Joseph Arianayagam residing at Tellippalai, at the American Ceylon Mission Press, Tellippalai,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org